# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 74/2021 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | காந்தாமணி | நாள் | 23.01.2025 |
| கணவர் பெயர் | துரைசாமி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-**

1) என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசாங்கம் நிலம் வழங்கியபோது 2 ஏக்கர் நிலம் எனக்கு வழங்கப்பட்டது. அதில் ச.எண்.899/3 என்ற சர்வே எண்ணிற்கு என் பெயரில் பட்டா எண்.4616 வழங்கப்பட்டது. ஆனால், ச.எண்.899/4 ல் எனக்கு வழங்கப்பட்ட நிலத்திற்கு அரசாங்கத்தால பட்டா வழங்கப்படவில்லை. அதனால் மேற்படி ச.எண்.899/4 ல் அரசாங்கத்தால் எனக்கு வழங்கப்பட்ட நிலம் என்னுடையது என விளம்புகை கோரியும், மேற்படி நிலத்திற்கு வருவாய் துறை என் பெயரில் பட்டா வழங்கவேண்டும் என கோரியும் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன்.

2) நான் என்ன படித்துள்ளேன் என்றால், 12 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன பணி செய்கிறேன் என்றால், அங்கன்வாடி பணியாளராக பணி செய்கிறேன். என் பூர்வீகம் என்னவென்றால், கருங்கல்லூர் அருகில், செம்பரபுதூர் ஆகும். என்னை எந்த ஊருக்கு திருமணம் செய்து கொடுத்தனர் என்றால், கருங்கல்லூருக்கு திருமணம் செய்து கொடுத்தனர். மேற்படி கருங்கல்லூரிலேயே கிராம நிர்வாக அலுவலகம் உள்ளது என்றால், சரிதான். என் கணவர் என்ன பணி செய்கிறார் என்றால், ஓட்டுநராக வேலை செய்கிறார். எவ்வளவு காலமாக என் கணவர் ஓட்டுநர் பணி செய்கிறார் என்றால், சுமார் 20 ஆண்டுகளாக பணி செய்கிறார்.

3) நான் எத்தனை ஆண்டுகளாக அங்கன்வாடி பணியாளராக பணி செய்கிறேன் என்றால், 7 ஆண்டுகளாக பணி செய்கிறேன். நான் கூட்டுக்குடும்பமாக உள்ளேனா என்றால், இல்லை. தனிக்குடித்தனமாக உள்ளேன். எந்த கிராமத்தில் உள்ள சொத்திற்கு இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், காவேரிபுரம் தெற்கு கிராமத்திலுள்ள சொத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

4) தாவா சொத்து என்ன வகைபாடு கொண்ட நிலம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து கல்லாங்குத்து வகைபாடு கொண்ட நிலம் என்றால், சரியல்ல. அ–பதிவேட்டின் படி, ச.எண்.899/3 மற்றும் ச.எண்.899/4 ஆகியவை கல்லாங்குத்து என வகைபாடு செய்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. தற்போது எந்த திட்டத்தின் கீழ் நான் எனக்கு பட்டா வழுங்கவேண்டும் என கேட்கிறேன் என்றால், நிலமற்ற ஏழை விவசாய கூலி தொழிலாளர்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் நான் கோருகிறேன்.

5) அவ்வாறு நிலமற்ற ஏழை விவசாய கூலி தொழிலாளர் திட்டத்தின் கீழ் நான் பட்டா வழுங்கவேண்டும் என கோரும் நிலையில், நான் அவ்வாறு நிலமற்ற ஏழை விவசாய கூலி தொழிலாளர் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், என்னிடம் உள்ளது. ஆனால், நீதிமன்றத்தில் நான் அதை சமர்ப்பிக்கவில்லை. மேற்படி நிலமற்ற ஏழை விவசாய கூலி தொழிலாளர் என்ற அடிப்படையில்தான் வருவாய் துறையில் பட்டா வழுங்ககோரியும் நான் விண்ணப்பம் அளித்துள்ளேன் என்றால், சரிதான்.

6) மேற்படி விண்ணப்பத்துடன் நான் நிலமற்ற ஏழை விவசாய கூலி தொழிலாளர் என்பதற்கு அடையாள ஆவணங்கள் எதையேனும் இணைத்து தாக்கல் செய்திருந்தேனா என்றால், இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களிலும் நிலமற்ற ஏழை விவசாய கூலி தொழிலாளர் என்பதற்கான ஆதாரங்களை நான் இணைக்கவில்லை என்றால், சரிதான். ச.எண்.899/3 ல் எனக்கு அளிக்கப்பட்ட நிலத்தில் என்ன பயில் செய்கிறேன் என்றால், சோளமும், நிலகடலையும் பயிர் செய்து வருகிறேன்.

7) மேற்படி ச.எண்.899/3 ல் எனக்கு வழுங்கப்பட்ட 0.33.5 ஏர்ஸ் நிலத்தின் சக்குபந்தி விவரம் என்னவென்றால், மேற்கில் பொன்னான் என்பவரது நிலமும் மீதி பக்கங்களில் எனக்கு தெரியவில்லை. மேற்படி 0.33.5 ஏர்ஸ் நிலத்தின் நீள, அகலம் என்னவென்றால், அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை.

8) மேற்படி எனக்கு ஒதுக்கப்பட்டதாக நான் சொல்லும் ச.எண்.899/3ல் உள்ள நிலத்திற்கு அருகில் என்னைபோலவே வேறு பயனாளிகள் யாருக்காவது நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி எனக்கு ஒதுக்கப்பட்ட நிலம் போக வேறு புறம்போக்கு நிலங்கள் ஏதேனும் அப்பகுதியில் உள்ளதா என்றால், இல்லை. ச.எண்.899/1ல் 0.35.0 ஏர்ஸ் நிலம் ஊர் நத்தம் என வருவாய் ஆவணங்களில் வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.